Tiaano® Innovation In Inert Metals

**Ti Anode Fabricators Pvt. Ltd.**
An ISO 9001 : 2008 Certified

Ti Nb Ir Ta Ru Pt

#48 Noothanchary, Madambakkam, Chennai – 126, India. Ph: 0091 44 2278 1148 Fax: 22781362 Email: info@tianode.com web: www.tianode.com

# “கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா”

## GOAL 2011-2012

- **Endeavor** : QUALITY
- **Turnover Target** : 240% ↑
- **Products for …**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** :100% ↓

## TESTIMONIALS

- **Customers…**
  - Up to Sep 11 : 490 Nos.
  - Up to Aug 11 : 485 Nos.
- **Performance Sep. '11 …**
  - Turnover growth : 2.66%
  - Employment growth : - 1.14%
  - 100% Attendance : 7.3%

## MANAGEMENT

- **Managing Director**
  - Mr. Velappan Jeyakummar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Ms. J. Vanajambika

## OUR FORMULATIONS

Tiaano – Electro Chemical & Exotic Metal Equipments

Aquafil – Water Disinfection Equipments.

Fib Tec GRP Mandrels – FRP/ GRP Mandrels & Tanks

HydroGen Go Green – HHO Generators

Titanictrade We deliver value chain – Portal for Exotic Metals

– Tiaano Vidyashrm (CBSC Pattern School)

## ACHIEVEMENT




## கவனிப்பு

ஆடு மேய்ப்பவனிடம் ஆடுகள் ஒரு முறை சென்று தங்கள் குறையை முறையிட்டன. நாங்கள் உங்களுக்கு பால் தருகிறோம். கம்பளி செய்ய நூல் தருகிறோம். எல்லாம் செய்தும் எங்களை நீங்கள் சரியாக கவனிப்பதில்லை. உணவைக்கூட நாங்கள் போய் மேய்ந்து தான் தேடிக்கொள்ள வேண்டியதாயிருக்கிறது. ஆனால் உங்களுக்கு இது எதுவுமே தராத நாய்களை நீங்கள் ரொம்பத்தான் கொஞ்சுறீங்க, உங்கள் தட்டிலிருந்தே கூட சில சமயம் உணவு கொடுக்கின்றீர்கள் இதெல்லாம் கொஞ்சம் அதிகமாய்த்தான் காணப்படுகிறது.

இதை கேட்ட வண்ணம் வந்த நாய் ஒன்று “நீ சொல்வது சரிதான் ஆனால் நாங்கள் இல்லையென்றால் என்னவாகும்? உங்களைத் திருடர்கள் திருடிக்கொண்டு ஓடுவார்கள், நீங்கள் பயமின்றி புல் கூட தின்ன முடியாது. அதனால்தான் எங்களுக்கு இந்த விசேஷ கவனிப்பு” என்றது நாய். ஆடுகளும் அதில் இருந்த உண்மையை ஒப்புக்கொண்டு தங்கள் குறையை மறந்தன.

ஆம் நண்பர்களே! இறைவன் யார் யாருக்கு என்ன கொடுக்க வேண்டுமென்று நினைக்கிறாரோ அவைகளை ஏற்ற வேளையிலே செம்மையாக நிறைவேற்றுவார். நமக்கு எது வேண்டுமானாலும் நாம் அவரிடத்திலேயே கேட்க வேண்டும். அதற்கு மாறாக தனக்கடுத்தவர்கள் மேல் பொறாமை கொள்ளக் கூடாது.

தொகுத்தளித்தவர் : Ms. P.E. Nancy
Director – Admin

## ஒவ்வொரு நாளும் இறுதி நாள்தான்



**ஆப்பிள் நிறுவனத்தை உருவாக்கிய ஸ்டீவ் ஜாப்ஸ் (05.10.11) மரணமடைந்தார். அவர் ஸ்டான்ட்போர்ட் பல்கலைகழகத்தில் 2005 ஆம் ஆண்டு நடத்திய உரையாடலின் தொகுப்பு.**

2004 ஆம் ஆண்டு எனக்கு கணையத்தில் புற்றுநோய் இருப்பது பரிசோதனையில் கண்டுபிடிக்கப்பட்டது. அதை குணப்படுத்த முடியாது என்பது தெரியும். எனது மருத்துவர் வீட்டுக்குச் சென்று விருப்பமானதை செய்யுங்கள் என்று கூறினார். அதற்கு அர்த்தம் மரணத்திற்கு தயாராகுங்கள். அப்படியானால் நீங்கள் வாழ்நாள் முழுவதும் செய்கின்ற வேலைகளை சில மாதங்களில் செய்தாக வேண்டும். உங்கள் குடும்பத்தினரிடம் இருந்து விடை பெற்றுக்கொள்ள தயாராக வேண்டும்.

எனக்கு 17 வயது இருக்கும் போது ஒரு வாசகத்தை படித்தேன் “உங்கள் வாழ்வின் ஒவ்வொரு நாளையும் இறுதி நாளாக நினைத்து வாழ்ந்தால் ஒரு நாள் அது உண்மையாகும்” என்பதே அந்த வாசகம். கடந்த 33 வருடங்களாக தினமும் காலையில் கண்ணாடியில் முகம் பார்த்து இன்றே எனக்கு இறுதி நாள் என்று நினைத்துக் கொண்டு வேலைகளை துவங்குவேன். அப்போது தொடர்ந்து எனக்கு வேலை இல்லையெனில் என்னுடைய வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்வேன். நான் விரைவில் இறந்துவிடுவேன் என்பதை மனதில் கொண்டதால் அது வாழ்க்கைக்கு மிகவும் உதவியாக இருந்தது. ஏனென்றால் எதிர்பார்ப்புகள், சுயநலம், பயம், தோல்வி இவையெல்லாம் மரணத்தைக் கண்டு ஓடிவிடும்.

நான் ஒவ்வொரு நாளும் முடிவை நினைத்துக் கொண்டிருந்தேன். அப்போது மருத்துவரின் அறிவுரையின் பேரில் அறுவை சிகிச்சை செய்து நலமானேன். நான் அத்தருணத்தில் மரணத்தின் எல்லைக்குச் சென்று திரும்பினேன். மரணம் என்பது நம் அனைவரும் உண்மையாக யோசிக்க வேண்டிய விஷயம். யாரும் இறக்க விரும்புவதில்லை. சொர்க்கம் செல்கிறவர்கள் கூட இறக்க விரும்புவதில்லை. ஆனால் மரணம் என்பது அனைவரின் முடிவு. எவராலும் அதிலிருந்து தப்பிக்க முடியாது. எனவே “மரணம் எப்போது நிகழும் என்பதை கண்டறிவதே வாழ்க்கையின் ஒரு சிறந்த கண்டுபிடிப்பு”. இது வாழ்க்கையை மாற்றி அமைக்கக் கூடியது. பழையதை அப்புறப்படுத்தி புதியதற்கு வழிவகுக்கக் கூடியது. இப்போது நீங்கள் புதியவர்கள் (இளைஞர்கள்) நீங்கள் பழையதாக (வயதானவர்கள்) கூடிய நாள் இன்றிலிருந்து மிகவும் தூரத்தில் இல்லை. உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் குறைவு. அதை வீணாக்காதீர்கள். மற்றவர்கள் கூறிய கருத்துக்களை வேதவாக்காகக் கொண்டு வாழ்க்கையை நிர்ணயிக்காதீர்கள், உள்ளுணர்வுக்கு மதிப்பளியுங்கள், பசியோடு இருங்கள், புதிய சிந்தனைகளோடு வாழுங்கள்.

-The Hindu

## FUNCTIONAL WISHES



**Bakrid**
**6th November**



**Children's Day**
**14th November**

**Best Wishes from Tiaano Employees**

## EXTERNAL SUPPORT

Banking : M/s. UCO Bank
Auditing : M/s. Nisar & Kumar
AQ Auditing : M/s. Juran Quality
Legal Advisers : Lr. M.K. Govindan
: Lr. V. Benedict Vincent
Tech. Consultant: Dr.G.S. Viswanath
Central Excise : Mr. R. Raghavan
Health Care : M/s. Bethesda Hospital
Tel:22294565
Jeya Clinic,
Tel: 98408 73107

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே!



**M. Kumar** **Nov 09**
Design

**A. Mohan** **Nov 10**
Marketing

**M. Kanagavalli** **Nov 14**
Marketing

**B. Mathavan** **Nov 14**
Production

**M. Loganayagi** **Nov 21**
Coating

**K. Radha** **Nov 27**
Admin

**J. Padmanaban** **Nov 30**
Marketing

**D. Kingston Andrews Paul** **Nov 30**
Marketing

**Best Wishes from Tiaano Employees**

## கான்:.பிடன்ஸ் கார்னர்

அழகிய ஜாடி ஒன்றில் கைவிட்டு விளையாடிக் கொண்டிருந்தான் அந்தச் சிறுவன். அவனால் கையை வெளியே எடுக்க முடியவில்லை. "அப்பா அப்பா" என்று அலறினான். அவரும் உதவினார். முடியவில்லை. ஜாடியை உடைக்கலாம் என்று முடிவு செய்தார்கள்.

திடீரென்று அவன் தந்தைக்குப் புரிந்தது. "மகனே! உன் கையை ஜாடிக்குள் மூடிக்கொண்டிருக்கிறாய் என்று நினைக்கின்றேன். விரல்களைப் பிரித்துக் கொண்டால் கையை வெளியே எடுத்து விடலாமே".

அந்தச் சிறுவன் சொன்னான், "மாட்டேன் அப்பா கையைப் பிரித்தால் என் ஐம்பது பைசா நாணயம் ஜாடிக்குள் விழுந்து விடும். ஜாடியை உடைத்து விடுங்கள்."
நம்மில் பலரும் சின்னச் சின்னப் பலவீனங்களை இறுகப் பற்றிக் கொண்டு, வாழ்க்கை என்கிற ஜாடியை உடைத்து விடுகிறோம்.

–கான்பிடன்ஸ் கார்னர் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

## *"Judge Yourself "*

Once upon a time there was a painter who had just completed his course. He took 3 days and painted beautiful scenery. He wanted people's opinion about his caliber and painting skills. He put his creation at a busy street-crossing. And just down below aboard which read -"I have painted this piece. Since I'm new to this profession I might have committed some mistakes in my strokes etc. Please put a cross wherever you see a mistake."

While he came back in the evening to collect his painting he was completely shattered to see that whole canvass was filled with Xs (crosses) and some people had even written their comments on the painting. Disheartened and broken completely he ran to his master's place and burst into tears. This young artist was breathing heavily and master heard him saying, "I'm useless and if this is what I have learnt to paint I'm not worth becoming a painter. People have rejected me completely. I feel like dying"

Master smiled and suggested "My Son, I will prove that you are a great artist and have learnt flawless painting. Do as I say without questioning it. It WILL work."Young artist reluctantly agreed and two days later early morning he presented a replica of his earlier painting to his master. Master took that gracefully and smiled.

"Come with me." master said.

They reached the same street-square early morning and displayed the same painting exactly at the same place. Now master took out another board which read -"Gentlemen, I have painted this piece. Since I'm new to this profession I might have committed some mistakes in my strokes etc. I have put a box with colors and brushes just below. Please do a favor. If you see a mistake, kindly pick up the brush and correct it."

Master and disciple walked back home. They both visited the place same evening. Young painter was surprised to see that actually there was not a single correction done so far. Next day again they visited and found painting remained untouched. They say the painting was kept there for a month for no correction came in!

**Moral of the story:** It is easier to criticize, but difficult to improve! So don't get carried away or judge yourself by someone else's criticism and feel depressed. Judge yourself! You are your best judge!

Compiled by : Mr. C. Abilash
Facilitation

## தெரிந்து கொள்வோம்

### நீண்டநாள் வாழ...

காலையில் இஞ்சி,

நடுப்பகலில் சுக்கு,

மாலையில் கடுக்காய்,

தினமும் 3 முதல் 4 லிட்டர் தண்ணீர்,

தினமும் மஞ்சள், பூண்டு, மிளகு,

ஆகியவற்றை நம் உணவில் சேர்க்க வேண்டும்.

### விசிறியும் டாக்டர்தான்!

**மயில் தோகை விசிறி**

அறிவை வளர்க்கும், தலை சுற்றல், வியர்வை, விக்கல், வயிற்று வலி நீக்கும்.

**வெட்டிவேர் விசிறி**

தேக எரிச்சல், நீர் வேட்கை நீங்கும், மன ஊக்கத்தைக் கொடுக்கும்.

**பனை விசிறி**

சுவையின்மையைப் போக்கும், வாத, பித்த, கப நோய்கள் நீங்கும்

### அறுசுவை ரகசியம்!

அன்றாட உணவில் நாம் எடுத்துக் கொள்ளும் அறுசுவைகளில் அடங்கியுள்ள ரகசியம் என்னென்ன?

| | | |
|---|---|---|
| **இனிப்பு** | – | உடம்பை வளர்க்கும் (உருளைக்கிழங்கு) |
| **கார்ப்பு** | – | செரிமானம் (மிளகாய், பூண்டு) |
| **உப்பு** | – | நச்சுத்தன்மை போக்கும் (கல் உப்பு) |
| **புளிப்பு** | – | வாயுத் தொல்லை நீங்கும் (நார்த்தங்காய்) |
| **கசப்பு** | – | கல்லீரல், பித்தப்பை சம்பந்தப்பட்ட நோய்களைக் களையும் (பாகற்காய், வெந்தயம்) |
| **துவர்ப்பு** | – | இரும்புச்சத்தை அதிகரிக்கும் (நாவல் பழம்) |

Compiled by : Mrs. M. Shahin
Marketing

### நம்மை நாம் உணரவேண்டும்

காலை வேளையில் மிகவும் பரபரப்புடன் காணப்பட்டது இரயில் நிலையம். இரயில்களும் புறப்படத் தயாராக இருந்தது. இரயிலின் உள்ளே மக்கள் கூட்டம் நிறைந்து வழிந்து கொண்டிருந்தது. இக்கூட்ட நெறிசலில் ஒருவரை ஒருவர் இடித்துக் கொண்டு உள்ளே நுழைந்தனர். அதில் ஒருவர் இன்னொரு பயணியை திட்டிக் கொண்டிருந்தார். அவர் ஏன் திட்டிக்கொண்டிருந்தார் என விசாரித்ததில் அவரின் காலை மிதித்து விட்டார் என்பதால் திட்டினாராம். அவர் அதே போல் இரயிலில் வருபவர் இடித்துவிட்டாலும் கூட அவரை தகாத வார்த்தையில் திட்டிவிடுவாராம்.

ஒரு நாள் இரயிலில் அதே கூட்ட நெறிசலில் இவருக்கு பக்கத்திலிருந்த பயணி இவரிடம் "ஐயா" என் காலானது மிகவும் வலிக்கிறது ஒரு வேளை உங்கள் கால் என் காலின் மீது இருப்பதால் வலிக்கின்றது என நினைக்கிறேன்" என தன்மையுடன் கூறினார். இதை கேட்டவுடன் அவர் காலை எடுத்து விட்டு வெட்கத்தில் தலை குனிந்தார். இனியாரையும் தகாத வார்த்தையில் பேசக்கூடாது என மனதில் உறுதி கொண்டார்.

தவறுகள் என்பது தெரிந்தே நடப்பதில்லை நம்மை அறியாமல் நடந்து விடுகிறது, எல்லோரும் ஏதாவது ஒரு வேளையில் கண்டிப்பாக தவறு செய்து இருப்போம். மற்றவர்களுக்கும் அப்படித்தான் என்பதை உணர்ந்து தன்மையான முறையில் தவறுகளை சுட்டிக்காட்டினால் யாருக்கும் எந்த விதமான மன வருத்தமும் ஏற்படாது.

Compiled by : Mr. C. Suresh
Production

## நம்பித்தான் ஆகவேண்டும்

## 5S (தொடர்ச்சி IV)

**ஐந்து குள்ளர்கள்**

உலகப் புகழ்பெற்ற மைக்ரோசா∴ப்ட் (Microsoft) நிறுவனத்தில் வேலைக்குச்சேர விரும்புகிறவர்கள், சவாலான, மிகக் கடுமையான பல தேர்வுகளைச் சந்திக்க வேண்டி இருக்கும்.

தேர்வுகள் என்றால், சும்மா 'இங்கி–பிங்கி–பாங்கி, போட்டுப் பார்த்துப் பதில் எழுதும் அ, ஆ, இ, ஈ வகைக் கேள்விகள் அல்ல. 'நீங்கள்தான் உலகின் கடைசி மனிதர். ஊங்களைத் தவிர ஈ, கொசு, காக்கைகூட மிச்சமில்லை. அப்படியொரு ராட்சஸத் தனிமையை எப்படிக் கழிப்பீர்கள்? என்பது போல் ஒரு விநோதமான கேள்வியைக் கேட்டுவிட்டு, அதற்கு நாம் எப்படிச் சிந்தித்துப் பதில் சொல்கிறோம் என்பதை ஆராய்வார்கள்.

இது போன்ற நேர்முகப் பரிசோதனைகளின் போது கேட்கப்படும் இன்னொரு பொதுவான கேள்வி, பெரிய நூலகம் ஒன்றினுள், உங்களுக்குத் தேவையான ஒரு குறிப்பிட்ட புத்தகத்தை எப்படிச் சீக்கிரத்தில் தேர்ந்தெடுப்பீர்கள்?

உதாரணமாக, உங்களுக்குத் திடீரென்று தி. ஜானகிராமனின் 'மோக முள்' நாவலைப் படிக்க வேண்டும் என்று ஆசை வந்துவிடுகிறது. உடனே உள்ளூர் நூலகத்துக்கு ஓடுகிறீர்கள். ஆனால் இன்னும் பத்து நிமிஷத்தில் கதவை மூடப் போகிறார்கள்.

ஆக, இந்தப் பத்து நிமிஷத்துக்குள், 'மோக முள்'ளைக் கண்டு பிடித்தாக வேண்டும். ஆனால், இரண்டாயிரம் சதுர அடிக்கு உயர அலமாரிகளாக நிரம்பியிருக்கும் அந்த மகா கட்டிடத்தில், இந்த ஒற்றைப் புத்தகத்தை எங்கே என்று தேடுவீர்கள்? – இதுதான் சவால்!

Cont...4

## கவிதைகள்

### அருவி



அருவி விழும்...!
ஆறாக ஓடும்...!
இன்னும் ஆவியாகும்...!
ஈரமான மேகமாகும்...!
உயிர் தரும் மழையாகும்...!
ஊரெல்லாம் நலம் செய்யும்...!
எங்கேயும் வளம் செய்யும்...!
ஏர் உழவனின் நண்பனாகும்...!
ஐயமே வேண்டாம்...!
ஒரு நிமிடம் – அந்த
ஓசையிடும்...
அருவியைப் பாருங்கள்...!
வீழ்வதால்
அது அழிவதில்லை...!

Compiled by : Mr. S. Siva Deepan
Facilitation

### ஹெல்மெட்டு



நல்லெண்ணம் இதயத்தின் ஹெல்மெட்டு,
நிறங்கள் மலர்களின் ஹெல்மெட்டு,
தமிழுக்கு இலக்கணம் ஹெல்மெட்டு,
தாயன்பு குழந்தைகளுக்கு ஹெல்மெட்டு,
உறவுக்கு சொந்தங்கள் ஹெல்மெட்டு,
உடலுக்கு உயிர்தானே ஹெல்மெட்டு,
இமைகளே விழிகளின் ஹெல்மெட்டு,
இறைவனே மனிதனின் ஹெல்மெட்டு,
எனவே,
நல்லவர்கள் நாலுபேர் சொல்கேட்டு,
நலமாக நீ மாட்டு ஹெல்மெட்டு,
நீ வாழ வேண்டுமடா பல்லாண்டு!

Compiled by : Mrs. C. Bavani
Receptionist

### அறிவிப்பு

நடைபெறவிருக்கும் 10வது(2012) அலுவலர் தினவிழாவின் குழந்தைகள் கலை நிகழ்ச்சியில் கலந்து கொள்ள விரும்பும் குழந்தைகளின் பெற்றோர்கள் தத்தம் பெயர்களை திருமதி. ஷாஹின் மணிகண்டன் (nltianode@tianode.com) அவர்களிடம் பதிவு செய்து கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**குறிப்பு.** நிரந்தர பணியாளர்களின் குழந்தைகள் மட்டும் கலைநிகழ்ச்சியில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

**இப்படிக்கு**
**விழாக்குழு**

**பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.**
**– Editor**

1. 'மோக முள்' ஒரு தமிழ்ப் புத்தகம், ஆகவே, ஆங்கில வரிசைகளையெல்லாம் தவிர்த்து விட்டு, தமிழ்ப் புத்தக அலமாரிகளைத் தேடிப் போவேன்.

2. தமிழிலும், நாவல் அலமாரிகளை மட்டும் தேடினால் போதுமானது.

3. நாவல்கள் எந்த வரிசையில் அடுக்கப்பட்டிருக்கிறது என்று பார்ப்பேன். ஊதாரணமாக, நாவல்கள் அவற்றின் ஆசிரியர் என்ற பெயரை அகர வரிசையில் தேடுவேன்.

4. தி.ஜா.வைக் கண்டறிந்தபின், அந்த அடுக்கிலிந்து 'மோக முள்' ளை எடுத்துக்கொள்வேன்.

அவ்வளவுதான்! அத்தனை பெரிய நூலகத்தில், நமக்கு வேண்டிய புத்தகத்தைக் கண்டறிவதற்கு, நான்கே படிகள் போதும், தமிழ்ப் புத்தகங்கள், அதிலும் நாவல்கள், அதிலும் ஜானகி ராமன் என்று படிப்படியாக நமது தேடல் எல்லையைக் குறுகலாக்கிக் கொண்டு போனால், கடைசியில் ஐம்பது, அறுபது புத்தகங்கள்தான் மிஞ்சும். அவற்றிலிருந்து, தலையணை சைஸ் 'மோக முள்' புத்தகத்தைச் சுலபமாகக் கொத்தியெடுத்து விடலாம்.

ஆனால், 'பதினெட்டாவது அட்சக்கோடு' என்று பெயர் கொண்ட நாவலை, புவியியல் பிரிவில் பத்திரப்படுத்தி வைக்கிற நம் ஊர் நூலகங்களில், இந்தமாதிரி வழிமுறை சரிப்படுமா?

ம்ஹூம், சான்ஸே இல்லை. மேற்சொன்னது போல் சட்டென்று ஒரு நாவலைக் கண்டுபிடிக்கவேண்டுமானால், அதற்கு முன்னால் நமது நூலகங்களில் ஏகப்பட்ட விஷயங்கள் ஒழுங்கு படுத்தப்பட வேண்டும்.

முதலாவதாக, தமிழ்ப் புத்தகங்கள் தனியே, ஆங்கிலப் புத்தகங்கள் தனியே என்று மொழிவாரியாகப் பிரித்து வைக்கிற ஒழுங்கான பழக்கம் வர வேண்டும்.

அடுத்து, புத்தகங்களை அவற்றின் உயரம் தடிமனுக்கு ஏற்ப அலமாரிகளில் குவித்து வைக்காமல், ஒவ்வொன்றையும் அறிவியல், வரலாறு, சிறுகதை, நாவல், கட்டுரை, கவிதை, விமர்சனம், விளையாட்டு, நகைச்சுவை, சுய முன்னேற்றம், சமையல் என்று முறைப்படி பிரிக்கவேண்டும். இதற்கு, நூலகர்கள் முதலில் எல்லாப் புத்தகங்களையும் ஒருமுறையாவது படிக்க வேண்டும்.

தொடரும்...

